
# எட்டையாபுரத் தேவன்

ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன்

11866



அமுத நிலையம்

# எட்டையாபுரத் தேவன்

(ஒரு நாடோடிக் கதை)

ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன்

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18

உரிமை பதிவு]

[விலை அணா 0—4—0

முதற்பதிப்பு : 2000 - 1949.

நேஷனல் ஆர்ட் பிரஸ், சென்னை - 18.

# முகவுரை

எட்டையாபுரத் தேவன் கதையை ஆதியில் பாடிய நல் இசைப் புலவரைப் பற்றியோ, அவர் எழுதிவைத்த ஏடுகளைப் பற்றியோ இப்போது தகவல் ஒன்றும் இல்லை. எழுத்து வாசனைகூட இல்லாத சில எளிய ஹரிஜனங்கள் பாடுவதைக் கேட்டு இந்த வசனக்கதை எழுதப்பட்டது.

இந்த முயற்சியில் கலப்பில்லாத சந்தோஷம் ஏற்பட்டது. தமிழ் மக்களோடு இந்தச் சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையே இந்தப் பிரசுரத்துக்குக் காரணம்.

அற்புதமான கதைப்போக்கு; ஆச்சரியத்தைக் கொடுக்கும் அமானுஷ்யமான சம்பவங்கள். மனித இயல்புகளை உள்ளபடி விளக்கிக் காட்டும் வாழ்க்கைச் சித்திரங்கள்; சொல்லால் அமைந்த கணக்கில்லாத சினிமாக் காட்சிகள்; வீர, ஹாஸ்ய, சோகங்கள் மேலிட்ட நவரசங்கள்; பழைய பாணியில் அமைந்து, மக்கள் அன்றாட வாழ்க்கையில் வழங்கும் சொற்களின் மிகுதியால் உண்டான எடுப்பும் வேகமும்; எல்லாவற்றுக்கும் மேல் நூல் முழுவதும் வீசும் நம் நாட்டு மண்ணின் நறுமணம் - இவை இந்தக் கதைக்கு ஒரு தனிச்சிறப்பைக் கொடுத்துவிடுகின்றன.

ஹரிஜன சேவையில் ஏற்பட்ட ஒரு சில கஷ்ட நஷ்டங்களை இந்நூல் முழுக்க முழுக்க ஈடுசெய்தது மட்டும்அன்றி, என்னைக் கடமைப் பட்டவனாகவும் செய்துவிட்டது.

இந்த நூலில் உள்ள பெருங் குடிமக்கள் ஹரிஜன விஷயத்தில் மிகவும் தாராளமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். நம் காலத்துக்கு ஏற்றபடி ஜாதி இந்துக்கள் ஹரிஜனங்களுக்கு நீதி வழங்க இந்தப் புத்தகமும் சிறிது உதவக்கூடுமானால், அதைக் காட்டிலும் சந்தோஷம் வேறொன்று இல்லை.

கோபிசெட்டிபாளையம்
10—12—49

ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன்

# நூலடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சக்கிலி முருகன் மாடு | 5 |
| 2. | பன்னிரண்டு வருஷக் கந்தாயம் | 8 |
| 3. | கொத்துக்காரன் முடிவு | 9 |
| 4. | போலீஸ்காரர்களுடைய பொருள்முயற்சி | 11 |
| 5. | வெள்ளையர் வீரம் | 13 |
| 6. | புதுச் சந்தை | 14 |
| 7. | சக்கிலி முருகன் சொகுசு | 16 |
| 8. | புது மோஸ்தர்த் தூது | 19 |
| 9. | கரும்புப் பந்தல் | 21 |
| 10. | "செத்தால் கன்னிவாடி; பிழைத்தால் எட்டையாபுரம்!" | 22 |
| 11. | பத்து அபசகுனங்கள் | 23 |
| 12. | பெரிய இடத்துச் சூழ்ரைகள் | 25 |
| 13. | காளை வீர்யம் | 27 |
| 14. | புது மணம் | 29 |
| 15. | தெய்விக மறைவு | 31 |

# எட்டையாபுரத் தேவன்

## 1. சக்கிலி முருகன் மாடு

கன்னிவாடி அப்பன் துரைசாமி

சோத்திலே மிகுந்தவரு, மிகுந்தவரு!
சுகத்திலே மிகுந்தவரு, மிகுந்தவரு!

என்று பாடிக் கதை ஆரம்பமாகிறது. (ஆனல் அறிவு, திறமை, தைரியம் இவைகளால் மிகுந்தவர் அல்லர்.) இந்தச் சொத்து சுகத்தைத் தின்பதற்குக் குழந்தைகுட்டி இல்லாதவர் துரைசாமி. இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள். ஆனல் ஒருவருக்கும் குழந்தை இல்லை. இருவரில் இளையகுடி வெள்ளையம்மாதான் அவருடைய சுகதுக்கங்களில் முழுப் பங்கு எடுத்துக்கொள்பவள். எதற்கெடுத்தாலும் துரைசாமி அவளைத்தான் கேட்பார்.

“ஆரடி இளையகுடி வெள்ளையம்மா! நமக்குச் குழந்தைகுட்டி இல்லை. நாம் தர்மம் மிகச் செய்ய வேணும்!” என்று துரைசாமி சொல்லுகிறார். ஆதரவுடன் அநேக தர்மங்களைச் செய்யவும் செய்கிறார்.

அப்படியும் குஞ்சு குழந்தை பிறக்கவில்லை. இருவரும் ஏங்குகிறார்கள். வெள்ளையம்மாவுக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. கன்னிவாடியில் சக்கிலி முருகன் வளர்த்துவரும் பசுவினுடைய பெருமை

யைப் பற்றி அவள் விசாரித்து வைத்திருக்கிறாள். அதை வாங்கிவிட அவள் ஆசைகொள்கிறாள்.

"சக்கிலி முருகன் மாடு
சன்னக் கொம்பு பில்லை மாடு
நாலு காலு நீல வர்ணம்;
கண் இரண்டும் பச்சை வர்ணம்;
அடிவயிறு தங்க நிறம்,
மேலே பார்த்தால் நீல வர்ணம்;
சக்கிலி முருகன் வளர்த்த மாடு
பன்னிரண்டு லட்சண முள்ள
மாடு அது நல்ல மாடு!"

"ஆரடா, மோனக்காரக் கறுப்பக் கவுண்டா! சக்கிலி முருகன் மாட்டை விலைபேசி வாங்கிவாடா. என்ன விலையானாலும் வாங்கி வா. வெள்ளை விநாயகர் கோயிலுக்குக் கொண்டுவா" என்கிறாள் அவள்.

மாட்டை விற்கச் சக்கிலி முருகன் சம்மதிக்கிறான். "தங்கமான வாய்திறந்து கேட்டபிறகு அது எனக்கு வேண்டாம் சாமி, புத்தி!" என்கிறான் அவன். அதற்கு 'முனை முறியாத' நூறு ரூபாய் கேட்கிறான். அந்தக் காலத்தில் அது மிகப் பெரிய தொகை.

வெள்ளை விநாயகர் கோயிலில் துரைசாமியும் வெள்ளையம்மாவும் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; மாட்டைக் கண்டு பூரிப்பு அடைகிறார்கள். விநாயகருக்குத் தேங்காய் பழம் மாற்றி, மாட்டை 'இடம்பிரி ஏழு சுற்று, வலம்பிரி ஏழு சுற்று'ச் சுற்றுகிறாள் வெள்ளையம்மா. வெள்ளை விநாயக்ருக்கு ஒரு கோரிக்கையும் விடுகிறாள்: "இந்த மாடு ஏழு காளை கன்று போட்டால், தவறாமல் ஏழு குடம் பாலை உன் தலைமேல் ஊற்றிப் பூஜைசெய்வேன்." அப்போது தனக்கும் குழந்தைகள் உண்டாகும் என்பது அவள் நம்பிக்கை.

வாங்கின முதல் மாதத்தில் சக்கிலி முருகன் மாடு பலன்படுகிறது. பத்து மாதம் கழித்து இரண்டு கன்றுகள் போடுகிறது. வெள்ளையம்மா அவைகளுக்குப் பெயர் வைக்கிறாள் :

" மண்டை பிதுங்கி மயிலைக் காளை;
செம்பூத்தான் காரிக் காளை "

ஒரு வருஷம் கழித்து ஊட்டு மறக்கிறது. மாடு மறுபடியும் பலன்படுகிறது பத்தாம் மாதம் ஜோடியாகப் பிறந்த இரண்டு கன்றுகளுக்கும் வெள்ளையம்மா என்ன பேர் வைக்கிறாள் தெரியுமா?

" ஜாதியிலே வெள்ளைக் காளை ;
சுத்தமான மயிலைக் காளை."

ஒரு வருஷம் கழிகிறது. ஊட்டு மறக்கிறது. மாடு மறுபடியும் பலன்படுகிறது, பத்து மாதகாலமும் கழிகிறது. அப்புறம் மேலும் இரண்டு காளைகள் பிறக்கின்றன.

' ஜாதியிலே செவலைக் காளை ;
ஜாதியிலே பில்லைக் காளை."

கடைசித் தடவையாக ஒரு வருஷம் கழிந்து ஊட்டு மறக்கிறது, மாடு பலன்படுகிறது; பத்து மாதங்களும் கழிகின்றன.

" நிச்சயமாக் கன்று போடுதங்கே,
லட்சணமா ஒன்று லட்சணமா !
புள்ளிக்குத்திப் பில்லைக் கன்று
கொம்பு ரெண்டும் சன்னக் கொம்பு;
காலு நாலும் நீல வர்ணம்,
கண்ணு ரெண்டும் பச்சை வர்ணம் ;
அடி வயிறு தங்க நிறம்.
மேலே பார்த்தால் நீல வர்ணம்,
பன்னிரண்டு லட்சண முள்ள,
கன்று அது நல்ல கன்று!"

தாயும் கன்றும் ஒரேமாதிரி!

# 2. பன்னிரண்டு வருஷக் கந்தாயம்

ஒரே நாளில் இரண்டு முக்கியமான காரியங்களைச் செய்கிறார் துரைசாமி.

"ஆரடா மோனக்காரக் கறுப்ப க்வுண்டா! ஏழு காளைகளை மேய்க்க ஒரு பிள்ளையார்ப் பையனைச் சேர்த்தவேணும். காளைகள் மலைகளில் 'மலம் புல்லை' மேய்ந்து சுனைத் தண்ணீர் குடிக்கவேணும். பத்திரமாய் மேய்த்துத்தானே பாங்காக வீட்டுக்கு ஓட்டி வரவேணும்!" என்று உத்தரவு பிறக்கிறது. பையனுக்கு மாதம் பன்னிரண்டு வள்ளத் தவசம் கூலி.

பிரிட்டிஷ் ஆட்சி நம் நாட்டில் ஏற்பட்டு ஸ்திரப்படாத காலம் அது. பன்னிரண்டு வருஷமாகத் துரைசாமி ராணிக்குக் கந்தாயமே கட்டவில்லை. 'உடனே கட்டவேண்டியது' என்று தாக்கீது வருகிறது. இனி ஏமாற்ற வழி இல்லை. துரைசாமி பன்னிரண்டு வண்டிகளில் கந்தாயப் பணத்தை ஏற்றுகிறார். ஒரு காளையைப் பார்த்தால் இன்னொன்றைப் பார்க்க வேண்டியதில்லை; அப்படி இருபத்துநாலு காளைகளைப் பூட்டச் சொல்லுகிறார். நேர்த்தியான பெட்டி வண்டியில் சலங்கை மாலை கட்டிய செல்வக் காளைகள் பறக்கின்றன. சர்க்கார் மன்றத்தில் கந்தாயத்தைக் கட்டிவிட்டுத் திரும்புகிறார்.

போனபோது இருந்த மௌசு வந்த பிறகு இல்லை. "ஆரடா மோனக்காரக் கறுப்பக் கவுண்டா! பையனும் காணோம், காளையும் காணோம்? வரத்தினால் பிறந்த வாலுவன் கன்றெல்லாம் எங்கே போச்சோ?" என்று மோனக்காரனை முடுக்குகிறார். அவன் மூன்று மலைகளையும் சுற்றிப் பார்க்கிறான். காளை அகப்படவில்லை. துரைசாமியின் மனம் திக்குத் திக்கென்று அடித்துக்கொள்ளுகிறது. "என்ன தீவினை வருமோ? ஏது தீவினை வருமோ?" என்று ஏங்கின வண்ணம் இருக்கிறார்.

# 3. கோத்துக்காரன் அழிவு

மேயப்போன காளைகளுக்கும் பையனுக்கும் என்னதான் ஆயிற்று? காளைகள் 'கண்டு போகின்றன' மேய்ச்சலை. கத்தமலை, தவளைமலை, வெள்ளிமலை, விராலிமலைகளை எல்லாம் தாண்டிப் போகின்றன. வெகு ஸ்வாரஸ்யமாக மேய்ந்துகொண்டிருக்கின்றன. பட்டப்பகல் நேரம். நடந்த சலிப்பில் பிள்ளையார்ப் பையனுக்குத் தூக்கம் வந்து விடுகிறது. நன்றாகக் குறட்டை விடுகிறான். காளைகள் புறப்பட்டுப் போய்விடுகின்றன.

பிள்ளையார்ப் பையன் எழுந்திருக்கிறான். காளைகளைக் காணோம்! திடுக்கிட்டுப் போகிறான். காளை இல்லாமல் போனால் கன்னிவாடி துரைசாமி கொன்றுவிடுவாரே! எப்படியும் தேடிக் கண்டு பிடித்தாகவேண்டும். காளை போன தாரை தென்படுகிறது அவனுக்கு. அதைப் பிடித்துக்கொண்டே போகிறான். இரண்டு நாள் பூராவும் நடக்கிறான். மூன்றாம் நாள் இருட்டும் நேரத்துக்கு ஒரு பெரிய சோளக்காட்டுக்கு வருகிறான். அங்கு ஒரு சாளை. பசியினாலும் களைப்பினாலும வாடிப்போன பையன் படுக்கிறான்; அயர்ந்து தூங்கிவிடுகிறான்.

மறுநாள் விடிந்ததும் கொத்துக்காரக் கவுண்டன் தோட்டத்துக்கு வருகிறான். சாளையில் யாரோ படுத்துக் கிடக்கிறான். குனிந்து பார்க்கிறான். உலைக்கால் குச்சியால் பையனை இடிக்கிறான். அவன் விழுந்தடித்துக்கொண்டு எழுந்திருக்கிறான். "யாரடா நீ?" என்று கொத்துக்காரன் கேட்கிறான்.

பையன் சமாசாரத்தைச் சொல்லுகிறான்: "காளைகள் ஏழும் வனவாசம் போய்விட்டன. அவை இல்லாமற்போனால் கன்னிவாடி துரைசாமி அடித்துக் கொன்றுவிடுவார். சோறு குடித்து மூன்று நாள் ஆறு பொழுது ஆய்விட்டன."

" ஆரடா பயலே! ஏரை ஓட்டு. நான் வீட்டுக்குப் போய்ச் சோறு கொண்டுவருகிறேன்" என்று கொத்துக்காரன் கிளம்புகிறான். பையன் எருதை வளைத்து வளைத்து ஓட்டுகிறான். திரும்பி வந்த கொத்துக்காரனுக்கு அசாத்திய சந்தோஷம். " தேவலையடா, நீ! ஒரு குட்டைத் தலைமாறு ஓட்டி விட்டாயே! நான்கூட இவ்வளவு ஓட்டமாட்டேன். ஏரை நிறுத்து; சோறு சாப்பிடு!" என்கிறான்.

சாப்பிட்ட பையனை மறுபடியும் ஏர் ஓட்டச் சொல்லுகிறான் கொத்துக்காரன். அதற்குள் அறுபது வள்ளம் சோளக் காட்டைச் சுற்றிப் பார்த்து விடலாம் என்று அவனுக்கு. ஒரு காடு தாண்டிப் பரண்மேல் ஏறுகிறான்.

அவன் வயிறு பகீர் என்றது. ஏழு பிரம்மாண்டமான காளைகள், விளைந்து ஆள் உயரத்துக்குமேல் இருக்கும் சோளக்காட்டை அழிமாட்டம் செய்து கொண்டிருக்கின்றன. அவைகளை வாய்க்கு வந்தபடி திட்டுகிறான்.

மளமளவென்று கீழே இறங்குகிறான். மடி நிறையக் கல்லைப் பொறுக்கிக் கொள்கிறான். மறுபடியும் பரண்மேல் ஏறுகிறான். கவண்மேல் கல்லை வைத்துக் 'குறுங் குறுங்'கென்று வீசுகிறான்.

மண்டை பிதுங்கி மயிலைக்காளை முன் காலை எடுத்து ஒரு ஜோசியம் பார்க்கிறது. சன்னக் கொம்புப் பில்லைக் காளை கண்கொண்டு வருகிறது. மற்ற எல்லாக் காளைகளுமே ஒன்று சேர்ந்து வருகின்றன. பரண்மேல் ஆளைப் பார்க்கின்றன. நாலு புறமும் சுற்றிச் சுற்றி வருகின்றன. பரணுடைய நாலு கால்களையும் தள்ளுகின்றன. கொத்துக்காரன் பொத் என்று கீழே விழுகிறான். காளைகள் அவனைத் தாம்பு பூட்டி மிதிக்கின்றன

சத்து வேறு, சதை வேருகப் பூமியில் இறக்கு கின்றன. மலைகளைத் தாண்டி மேய்ச்சலுககுப் போய் விடுகின்றன.

பிள்ளையார்ப் பையன் ஏர் ஓட்டியபடி நினைத்துப் பார்க்கிருன். "வெகுநேரம் ஆய்விட்டது, கொத்துக்காரனைக் காணுமே!" என்று ஏரை நிறுத்திச் சோளக்காட்டைச் சுற்றி வருகிருன். சங்கு போல எலும்பு தென்படுகிறது. கொத்துக் காரனுடைய வீடு தேடி ஓடுகிருன். சங்கதியைச் சொல்கிருன். பெரிய கூட்டம் கூடி விடுகிறது. 'ஏட்டையா', இன்ஸ்பெக்டர் எல்லோரும் வந்து விடுகிருர்கள். மரண விசாரணை நடக்கிறது. "மனுஷன் செய்த வினையோ? மாடு செய்த வினையோ?" என்று ஆராய்ச்சி செய்கிருர்கள்.

ஒன்று விடாமல் எலும்பை எல்லாம் பொறுக்கு கிருர்கள். ராத்தலில் நிறுத்துப் பார்க்கிருர்கள். பூரா அறுபது ராத்தல் குஞ்சுகிறது. "எலும்பு மட்டும் அறுபது ராத்தல் குஞ்சினல், உயிரோடு இருக்கும் போது ஆள் எப்படி இருந்திருக்க வேண்டும்?" என்று பேசிக் கொள்கிருர்கள். "மாடு செய்த வினைதான்; மனுஷன் செய்தவினை இல்லை!" என்பது தீர்ப்பு. மாடுகளும் கன்னிவாடி துரைசாமியின் மாடுகள் என்று பிள்ளையார்ப் பையனல் தெரிந்து போகிறது.

## 4. போலீஸ்காரருடைய பொருள் முயற்சி

திக்குத் திக்கென்று நெஞ்சு அடித்துக் கொண்டிருக்கும் கன்னிவாடி துரைசாமியின் கைக்குச் சர்க்கார் மன்றத்திலிருந்து கட்டோலை வருகிறது. பெட்டி வண்டி ஏறுகிருர். மன்றத்தில் கைகட்டி வாய் புதைத்து நிற்கிருர்.

"யாரடா கன்னிவாடி துரைசாமி? நீயா?"

"ஆமாங்க!"

"காளை எல்லாம் உன்னுடையதா ?"

"ஆமாங்க !"

"அநேக ஜனங்களைக் கொன்று தள்ளுகின்றன. அநேகமான பயிர்களை அழிமாட்டம் செய்கின்றன. சீக்கிரம் பிடித்துக் கட்டாவிட்டால் உனக்கு ஆறு வருஷத் தண்டனை; அறுபது வருஷம் ஜன்மம் !"

துரைசாமிக்குக் குலைநடுக்கம் எடுத்துக்கொள்கிறது. "ஐயா, சாமி, காளையைப் பிடித்துக் கட்டும் 'கருத்தாளி' கன்னிவாடியில் பிறக்கவில்லை. எனக்கு மூன்று லட்சம் சொத்து இருக்கிறது. ஆடு ஆயிரம், குட்டி ஆயிரம்; மாடு ஆயிரம், கன்று ஆயிரம்; காளை ஆயிரம், எருது ஆயிரம்; எருமை ஆயிரம், கடா ஆயிரம். ஏராளமான பூமி காணி இருக்கிறது. வெள்ளியில் ஏழு சுற்றுக் கோட்டை, தங்கத்தில் ஏழு சுற்றுக் கோட்டை எல்லாம் இருக்கின்றன. 'கருத்தாளி' யாராய் இருந்தாலும் பிடித்துக் கட்டவேணும். சொத்தில் சரிபாதி கொடுத்துவிடுகிறேன் !" என்று உறுதி சொல்லுகிறார் மன்றத்தில். அப்படியே கைஎழுத்தும் போட்டுவிடுகிறார்.

ஏழு போலீஸ்காரர்களுக்கு நப்பாசை பிடித்துக்கொள்ளுகிறது. "சே ! இந்தப் பன்னிரண்டு ரூபாய் பிச்சைப் பிழைப்பு நமக்கு ஆகாது!" என்று தீர்மானித்துக்கொள்ளுகிறார்கள். ஏழு வால் கயிறுகளையும், ஏழு கூடை மண்வெட்டிகளையும் எடுத்துக்கொண்டு ஓடுகிறார்கள்.

ஏழு மலைகளையும் தாண்டிப் போகிறார்கள். சிங்கேரி மலையில் நாலு பேர் அத்திமரம் ஏறிப் பார்க்கிறார்கள். மத்தியான்ன வேளை; காளைகள் மடுவில் தண்ணீர் குடிக்க வருகின்றன. "நாளையும் இதேபோல வரும்" என்று முடிவு கட்டுகிறார்கள்.

மறுநாள் மடுவுக்கு வரும் வழியில் ஏழு பேர் ஏழு புதைகுழி வெட்டுகிறார்கள். ஏழு கன்னி

வைக்கிறார்கள். நாலுபேர் மரத்தின் மேலும் மூன்று பேர் கீழேயும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

காளைகள் வருகின்றன. மண்டை பிதுங்கி மயிலைக் காளை முன்காலை வைத்து ஒரு சாஸ்திரம் பார்க்கிறது. "ஏதுடா தம்பிமார்களே! கட்டிலே சிக்கப் போகிறோம்! இது வரையில் சிக்காத நாம் கட்டிலே சிக்கப் போகிறோம்!" என்று எச்சரிக்கை செய்கிறது.

இதைப் புலிக்குத்திப் பில்லைக்காளை லக்ஷ்யம் செய்யவில்லை. 'இந்தச் சகுனம் நம்மை என்ன செய்துவிடும்?' என்று முன்னால் நடக்கிறது. மற்ற ஆறும் பின்னால் வருகின்றன. ஏழு காளைகளும் ஏழு குழிகளில் விழுந்து விடுகின்றன.

ஏழு காளைகளும் ஏழு குதி குதிக்கின்றன. ஏழு வால் கயிறுகளும் தூள் தூளாகப் பறக்கின்றன. புலிக்குத்திப் பில்லைக்காளை 'ஒரு கண் கொண்டு' பார்க்கிறது. மனுஷன் சோடு தென்படுகிறது. மூன்று மனிதர்களும் தென்படுகிறார்கள். மூன்று காளைகள் மூன்று பேரையும் கொம்பினால் கோதி எடுக்கின்றன; தாம்புகட்டி மிதிக்கின்றன. மூவரும் பஞ்சாமிருதம் ஆகிறார்கள். காளைகள் மேயப் போய்விடுகின்றன.

மரத்தின்மேல் இருந்த நாலு போலீஸ்காரர்களும் மெல்ல இறங்கி வருகிறார்கள். 'நான் பிழைத்தேன், கந்தன் பிழைத்தான்' என்று அலறிப் புடைத்துக்கொண்டு ஓடுகிறார்கள். மன்றத்துக்குப் போய் நடந்ததைச் சொல்லுகிறார்கள்.

## 5. வெள்ளையர் வீரம்

ஏழு வெள்ளையர்கள் கேட்டுக்கொண்டு நிற்கிறார்கள். காளைகளுடைய பலம் ஒரு விதமாக அவர்களுக்கு விளங்குகிறது. ஏழு இரும்புச் சங்கிலியை எடுத்துக்கொள்ளுகிறார்கள். "போலீஸ்காரர்

களுக்குத் திறமை இல்லை. மூளையும் இல்லை. நமக்கு இரண்டும் உண்டு'' என்பது அவர்களுடைய எண்ணம். நம்பிக்கையுடன் அவர்கள் சிங்கேரி வனத்துக்குக் கிளம்புகிறார்கள்.

முதல் நாளில் அவர்களும் காளைகள் வரும் வழியைக் கண்டு கொள்ளுகிறார்கள். பிறகு புதை குழி வெட்டிக் கண்ணியை வைக்கிறார்கள். வெகு ஜாக்கிரதையாக ஏழு பேரும் ஏழு அத்திமரத்தில் ஏறிக்கொள்ளுகிறார்கள்.

காளைகள் குழிகளில் விழுகின்றன; குதித்து மேலே எழுகின்றன. சங்கிலிகள் பட படவென்று தெறிக்கின்றன; விண்ணுலகம் பறக்கின்றன. ஜோடுகளையும் மரங்களின்மேல் மனிதர்களையும் கண்டு காளைகள் அத்திமரத்தை முற்றுகை போடுகின்றன. மூன்று நாள் அவை மேய்ச்சலுக்குப் போகவில்லை. தினம் ஐந்து ரூபாய்க்கு ரொட்டி, பால்,பழம், முட்டை, மீன், கறி தின்று கொழுத்துப் போன வெள்ளையர்கள் அத்தித் தழையைத் தின்கிறார்கள். அவர்களுக்குக் கழிவு எடுக்கிறது. அத்தி மரத்தில் அவர்கள் வௌவால் குட்டிகளைப்போல் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நாலாம் நாள் காளைகள் மேயப் போய்விடுகின்றன. 'நான் பிழைத்தேன், கந்தன் பிழைத்தான்' என்று வெள்ளையர்கள் ஓடிவந்து விடுகிறார்கள்.

## 6. புதுச் சந்தை

மனம் சோர்ந்து வீடு திரும்பிய அப்பன் துரைசாமி அழுகிறார். "ஆரடி இளையகுடி வெள்ளையம்மா! நான் ஒரு மாத வாய்தாவில் காளை ஏழையும் பிடித்துக் கட்டவேணுமாம். கன்னிவாடியில் அதற்கு ஒரு 'கருத்தாளி' பிறக்கவில்லை. நான் ஆறு வருஷம் தண்டனையாப் போகப் போகிறேன். அறுபது வருஷம் ஜன்மம் போகப் போகிறேன்!'' என்று அங்கலாய்த்துக் கொள்ளுகிறார்.

வெள்ளையம்மா இதற்கு ஒரு வழியைத் தயாராக யோசித்து வைத்திருக்கிறாள். "எட்டையாபுரத்தில் ஏழு எருமைப் பால் குடிக்கும் இளையான் கறுப்பத் தேவர், எட்டாள் தேசம் ஆளும் மூட்டாள் கறுப்பத்தேவர் இருக்கிறார். அவர் காளை பிடித்துக் கட்டுவார்; ஒரு காளை வீர்யம் பார்ப்பார்" என்கிறாள்.

அவரைக் கன்னிவாடிக்கு வரவழைக்கும் கோளாறையும் வெள்ளையம்மா சொல்லுகிறாள்: "அகோ வாருங்கள், மன்னா! கன்னிவாடிக்கொரு சந்தை உண்டுபண்ண வேணும். நாலு புறம் நாலு வாசல் வைத்து, வாசலுககு இரண்டு வில்லைச் சேவகரை நிறுத்த வேணும். சுற்று ராஜாக்களுக்குப் புதுச் சந்தை பார்க்க வரும்படி கட்டோலை அனுப்பவேணும். எட்டையாபுரத் தேவர் வருவார். பிடித்துக்கொள்ளலாம்!"

துரைசாமிக்குச் சந்தோஷம் வந்துவிடுகிறது. "என்ன புத்தி! ஏது புத்தி!" என்று வெள்ளையம்மாவை மெச்சிக் கொள்ளுகிறார். "ஆரடா உள்ளூர்ப் போயன்மார்களா! எட்டு நாளில் ஒரு புதுச் சந்தை முடித்துக் கொடுப்பீர்களா?" என்று கேட்கிறார்.

அருமையான சந்தையைப் பார்க்கப் பெரிய கூட்டம் கூடிவிடுகிறது. எட்டையாபுரம் கறுப்பத் தேவனும் ஆறு அண்ணன்மார்களும் ஒரு வாசல் வழியாகச் சந்தைக்குள் நுழைகிறார்கள். "அவர்தாம் ஏழு எருமைப் பால் குடிக்கும் இளையான் கறுப்பத் தேவர்! ஒரு காளை வீரியம் பார்ப்பார்!" என்று ஜனங்கள் கை காட்டிப் பேசிக்கொள்கிறார்கள். அது காதில் விழுந்ததும் ஏழு பேரும் வேகமாக நடையைக் கட்டிவிடுகிறார்கள். பெட்டி வண்டியில் ஏறிக்கொண்டு காற்றாய்ப் பறக்கிறார்கள். துரை

சாமியின் வில்லைச் சேவகர்கள் அரை மைல் ஓடிப் பார்க்கிறார்கள். தோற்றுத் திரும்புகிறார்கள்.

## 7. சக்கிலி முருகன் சோதசு

"ஆரடி இளையகுடி வெள்ளையம்மா!"

"அகோ வாரும் சாமி! யோசனை ஒன்றும் வேண்டாம்!" என்று அவள் தேற்றுகிறாள்.

"ஆரடா வில்லைச் சேவகர்களா!! இரண்டுபேர் போங்கள்! சக்கிலி முருகனைக் கூட்டி வாருங்கள்!" என்று உத்தரவிடுகிறாள்.

ஆனல் சக்கிலி முருகன், "நானெங்கே, சாமி, வாரேன்?" என்று சொல்லிவிடுகிறான். முந்தின நாள்தான் அவன் பெண்டாட்டிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. அவளுக்கு எண்ணெய் இல்லை. துணி இல்லை. சக்கிலி முருகன் ஏழு தோட்டங்களில் பறி தைக்கவேண்டி இருக்கிறது. ஏழு தோட்டங் களில் பாத்தி கட்டவேண்டும். ஏழு தோட்டத்துக் குக் களை வெட்டுப் பாக்கி இருக்கிறது.

"என்ன இருந்தாலும் நீ வந்தாக வேணு மடா, சக்கிலி முருகா! அப்பன் துரைசாமி கூட்டி வரச் சொன்னார்" என்று சேவகர்கள் சொன்னது தான் தாமதம். சக்கிலி முருகனுக்கு, "கண் சிவக்குது, கடுங்கோபம் ஆகுது; மீசை ரெண்டும் ஈட்டிபோல நிக்குது." அவன் கீசுக் கொம்பை எடுத்துக்கொள்ளுகிறான். இனி அதிகம் பேசினல் பூசைதான் கிடைக்கும் என்று சேவகர்கள் ஓட்டம் பிடிக்கிறார்கள்.

கொஞ்ச நேரத்துக்குள் இரண்டு பேருக்கு நாலுபேராய் வந்து விடுகிறார்கள். ஒவ்வொருவர் கையிலும் துண்டுத் தடி! சக்கிலி முருகன் குதிர்ச் சந்தில் ஓடி ஒளிகிறான். அவனை வெளியே இழுத்து வருகிறார்கள். நன்றாக 'மரியாதை' செய்கிறார்கள். அரண்மனைக்கு இழுத்துப் போகிறார்கள்.

"ஏண்டா, சக்கிலி முருகா, நீ வரமாட்டேன் என்று சொன்னாயாம்!" என்று கன்னிவாடி கேட்கிறார்.

சக்கிலி முருகன் தன் பாடங்களை மறுபடியும் படிக்கிறான். "பீக்கிளி மாரியாத்தாப் புண், இப்போது புதிதாகச் சேருகிறது."

"என்ன இருந்தாலும், சக்கிலி முருகா, நீ எட்டையாபுரம் போகவேணும்! கட்டோலை கொடுத்துவர வேணும்!"

"ஐயோ, சாமி! அங்கே போனால் நான் செத்து மடிஞ்சு போவேன்!"

சக்கிலி முருகனுக்குத் தினம் என்ன செலவாகும் என்று கேட்கிறார். அன்றாடம் உறவு முறை, ஒத்தார் வந்து போய்க்கொண்டே இருக்கிறார்களாம், அவன் வீட்டுக்கு! தினம் பத்து வள்ளத் தவசமும் ஐந்து ரூபாயும் ஆகுமாம்!

"எட்டையாபுரம் போய்த் திரும்பி வரும்வரைக்கும் தினந்தோறும் அவன் வீட்டுக்கு அந்தப் படி அனுப்பப்படும். தவிர, ஒரு வேளை அவன் செத்து மடிந்தால், அவன் குடும்பத்துக்கு ஊரடிக்காடு ஆறு ஏகர் பட்டயம் செய்யப்படும்." இப்படித் துரைசாமி உத்தரவிடுகிறார்.

"ஆரடா மோனக்காரக் கறுப்பக் கவுண்டா! இவனுக்கு நாலு குச்சிக் கள், நாலு குச்சிச் சாராயம் ஊற்று! கேட்கிறான், இன்னும் ஊற்று!"

சக்கிலி முருகனுக்குக் கள் விசை ஏறுகிறது. கண் இரண்டும் செம்மைபூத்து, மீசை ஈட்டிபோல் நிற்கிறது. சாராயப் போதையில் வாய்விட்டுக் கேட்கிறான்.

"சாமி! உங்கள் கையில் உள்ள முத்திரை மோதிரம் என் கையில் போடவேணும். சாமி! உங்கள் இடுப்புத் தங்க அரனை என் இடுப்பில் போடவேணும்!"

"இந்தாடா சக்கிலி முருகா!"

"சாமி! உங்கள் மேல் முருகு, கீழ் முருகு என் காதில் போடவேணும்!"

"இந்தாடா சக்கிலி முருகா!"

"சாமி! உங்கள் கால் மிஞ்சி, கப்பம் என் காலில் போடவேணும்!"

"இந்தாடா சக்கிலி முருகா!"

"சாமி! உங்கள் மேல் வேட்டி, கீழ் வேட்டி!"

"ஆரடா மோனக்காரக் கறுப்பக் கவுண்டா! எனக்கு மாற்று வேட்டி கொண்டாடா!"

"உங்கள் தங்க உருமாலை, சாமி!"

"இந்தாடா!"

"உங்கள் பூச் சக்கரக் குடை!"

"ஆரடா மோனக்காரக் கறுப்பக் கவுண்டா! உள்ளைத் திறந்து இவனுக்கு என் பூச் சக்கரக் குடையைக் கொண்டுவந்து கொடடா!"

கள்ளுப் போதையில் சக்கிலி முருகன் அஞ்சாமல் கேட்கிறான். "சாமி! உங்கள் பட்டத்து நீலக் குதிரை!"

"ஆரடா மோனக்காரக் கறுப்பக் கவுண்டா! பட்டத்துக் குதிரைக்கு அங்குதடி, முகமுட்டி, ஜீனி எல்லாம் பூட்டி நிறுத்துடா!"

"உங்கள் முள்ளுக்குறடா!"

"வந்துவிட்டது."

"சாமி நான் பயந்து கேட்கட்டுமா? பயப்படாமல் கேட்கட்டுமா?"

எப்படியாவது இவன் எட்டையாபுரம் போய் விட்டு வந்தால் போதும் என்று இருக்கிறது துரைசாமிக்கு. "பயப்படாமல் கேளடா" என்கிறார்.

"சாமி, நான் குதிரை வாகனம் ஏறினதில்லை. இன்றைக்குத் தவிர வேறு என்றைக்காவது ஏறப் போகிறேனோ? நான் குதிரை போகிற முன்

அழகு, பின் அழகு பார்க்கவேணும், சாமி! அரை மைல தூரத்துக்குத் தாங்கள் கடிவாளம் பிடிக்க வேணும், சாமி!''

சக்கிலி முருகன் ஆசை தீரக் குதிரை போகும் அழகைப் பார்க்கிறான். ''இனி நிறுத்துங்கள் சாமி!'' அவன் குதிரைமேல் ஏறிக்கொள்ளுகிறான். ''கடிவாளத்தை விட்டுவிடுங்கள், சாமி!'' என்கிறான்.

''அடே, கட்டோலையைப் பதனமாகக்கொண்டு போய்ச் சேர்த்தவேணுமடா!'' என்று கன்னிவாடி கெஞ்சாக் குறையாகக் கேட்டுக்கொள்ளுகிறார்.

''நல்லது, சாமி!'' என்று முருகன் வாகனம் ஏறு கிறான். ஒரு காடு தாண்டி நாலு வாங்கு வாங்கு கிறான். குதிரையின் அடி வயிற்றில் முள்ளுக் குறடாப் பிய்க்கிறது, அதன் அடி மணல் தூள் பறக்கிறது. எட்டையாபுரக் கோட்டை ஆறுநாள் பயணம்; அரை நாளில் முடிந்துபோகிறது. விடிய விடியப் பிரயாணம் செய்து, 'வெங்கோழி கூவும்போது' எட்டையாபுரத்தில் வந்து நிற்கிறான்.

## 8. புது மோஸ்தர்த் தூது

எட்டையாபுரத் தாயார் 'கை கால் கழுவக்' காட் டுப்புறம் ஒதுங்கி இருக்கிறாள். குதிரைமேலிருந்து சக்கிலி முருகன் கேட்கிறான்: ''ஆரடி அங்கே! அந்த எட்டையாபுரத்துப் பயல் வீடு எது?''

அவள் விழுந்தடித்துக்கொண்டு ஓடுகிறாள். ''ஆரடா மகனே! உனக்கு என்ன உறககமடா? எவனோ குதிரைமேல் இருந்துகொண்டு, 'அந்த எட்டையாபுரத்துப் பயல் வீடு எது?' என்று கேட் கிறானே! நீ ஏழு எருமைப் பால் குடித்து என்ன பிரயோசனமடா? எட்டு ஆள் தேசம் ஆண்டு கண்ட பலன் என்ன?'' என்று முறையிடுகிறாள்.

''ஆரடி பெற்றவளே! தாயாரே! போர்வைத்த ரத்தினமே! நாலு நாயைத் தும்பைத் தறித்துவிடு!'' என்று கறுப்பத் தேவன் கட்டளை இடுகிறான்.

நாலு பெரிய வெள்ளை நாய்கள் குதிரை நிற்கும் காட்டை நோக்கி ஓடுகின்றன. அதை வளைக்கின்றன. முன் தாவு பின் தாவு தாவிக் குதிரையை நன்றாகக் கடித்து விடுகின்றன. சக்கிலி முருகன் காலை இந்தப் பக்கம் ஒரு நாய் கௌவுகிறது. அந்தப் பக்கம் ஒரு நாய் பிடுங்குகிறது. குதிரைக்கும் மனிதனுக்கும் 'மேலே ரத்தம் பீருடுது.'

அப்போதுதான் கறுப்பத் தேவன் முகம் கழுவி, வாய் கொப்புளித்துச் சடாவைக் காலில் மாட்டிக்கொண்டு ஒய்யாரமாக நடந்து வருகிறான். குதிரை மேல் இருந்து சக்கிலி முருகன் கட்டோலையை எடுத்து அவன் காலடியில் வீசுகிறான். கறுப்பத்தேவன் அதை எடுத்துப் படிக்கிறான். உடனே நிலைமை மாறிப் போகிறது.

"ஆரடி பெற்றவளே, என் தாயே, குடி இருந்த கோபுரமே! நாயைக் கூப்பிடவேணும்! பிடித்துக் கட்டவேணும்!" என்கிறான்.

"ஆரடா வந்தவனே! குதிரையை ஆலமரத்தில் சேந்திக் கட்டிக் குறட்டுத் தலைவாசலில்வந்து நிற்க வேணும்!" என்கிறான்.

இப்படிச் சொல்லிவிட்டுக் கறுப்பத் தேவன் போய் விடுகிறான்.

குறட்டுத் தலைவாசலுக்குத் தள்ளாடித் திக்கு முக்காடி முருகன் வந்து சேர்கிறான். கைகட்டி வாய் புதைத்து என்ன ஆணை வருமோ என்று காத்து நிற்கிறான்

"என்னைப் 'பயலே' என்று சொன்னதற்கு நீ என்ன வகுப்படா?" என்று கேட்கிறான் அவனைப் பார்த்து.

"நான் கவுண்டனுங்க!"

கறுப்பத் தேவன் கட்டோலையைப் படித்துப் பார்க்கிறான். "உள்ளதைச் சொல்லடா!"

"நான் உக்கிலிங்க!"

மறுபடியும் கட்டோலை வாசிப்பு. "புரட்டு வேண்டாமடா!"

"நான் உப்பிலி நாயக்கனுங்க!"

"உன்னை மூன்று தரம் கேட்டாயிற்று. இனி நிஜத்தைச் சொல்லா விட்டால் உன்னைச் சுண்ணாம்புக் காளவாயில் வைத்து விடுவேன்."

சக்கிலி முருகன் நெடுக விழுந்து கும்பிடுகிறான். "சாமி, புத்தி! நான் ஒரு சேதி கொண்டு வந்தேன். ஜாதியில் சக்கிலியன். என்னைக் காப்பாற்ற வேண்டும்!" என்று கெஞ்சுகிறான்.

இளகாத மனம் என்று சொல்லுவார்கள்; அது இளகி விட்டது. "ஆரடி பெற்றவளே! என் தாயே! பேர் வைத்த ரத்தினமே! நாய் கடித்த புண்ணுக்குப் பச்சிலை வைத்துக் கட்டவேணும்!" என்கிறான். புண் அரை நாளில் காய்ந்து எப்போதும் போல் குணப்படுத்தும் பச்சிலைகள்!

"ஆரடி நங்கைமார் ஆறு பேரே! இவனுக்கு ஈனுத வாழையின் குருத்தோலை போட்டுப் பதினாறு காய் கறிசோறு சமைத்துப் போடவேணும். தட்டத்திலே தாம்பூலச் சுவுளிகளை வைக்கவேணும்" என்று ஆணை பிறக்கிறது.

சக்கிலி முருகன் பாடு கொண்டாட்டந்தான். நன்றாகச் சாப்பிட்டு விட்டு, வெற்றிலை பாக்கைப் போட்டுக் கொள்ளுகிறான். கறுப்பத் தேவனிடமிருந்து பதில் கட்டோலையை வாங்கிக் கொண்டு கிளம்புகிறான்.

## 9. கரும்புப் பந்தல்

கட்டோலையைப் படித்த வெள்ளையம்மாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. கால் நிலத்தில் பாவவில்லை. துரைசாமியிடம் ஓடுகிறாள். அதைப் படித்துப் பார்த்து அவர் உத்தரவு போடுகிறார். "ஆரடா மோனக்காரக் கறுப்பக் கவுண்டா! நம் சேலம் ஜில்லாவில் MAHAMAHOPADHYAYA செய்கிறவர்

களுக் கெல்லாம் ஆள் விடு. கருங்கரும்பு ஆயிரம் வண்டி, செங்கரும்பு ஆயிரம் வண்டி, வெள்ளைக் கரும்பு ஆயிரம் வண்டி! கிடைத்த கரும்பை எல்லாம் வாங்கிப் போடு! அஞ்சாயிரம் வண்டி, பத்தாயிரம் வண்டி ,எத்தனை கிடைத்தாலும் சரி!'' என்கிறார்.

''ஆரடா உள்ளூர் ஆசாரிமார்களா! கூலியைப் பற்றி யோசிக்காதீர்கள். எட்டு நாளில் கரும்புப் பந்தல் எட்டையாபுரக் குறட்டு வாசலைப் போய் முட்ட வேணும்!''

இராப் பகலாய் வேலை நடக்கிறது. கரும்புக் குத்துளை அடிக்கிறவர்கள் அடிக்கிறார்கள். நிறுத்து கிறவர்கள் நிறுத்துகிறார்கள். லட்சணமான கரும்புப் பந்தல் கிடு கிடு என்று ஓடுகிறது; எட்டு நாளுக்குள் எட்டையாபுரத்துக் குறட்டு வாசலில் போய் முட்டு கிறது. இதைக் கறுப்பத் தேவன் கண்ணால் பார்த்துவிட்டான்.

## 10. ''செத்தால் கன்னிவாடி பிழைத்தால் எட்டையாபுரம்!''

''ஆரடி பெற்றவளே! தாயாரே! குடி இருந்த கோபுரமே! இரு ஜாலம் செய்யாதே. இனி இருக்க நாயம் இல்லை. நான் கன்னிவாடி போக வேணும். லட்சணமான வார்த்தை நிச்சயமாகச் சொல்லு! நான் காளை பிடித்துக் கட்ட வேணும்; ஒரு காளை வீர்யம் பார்க்க வேணும்!''

''ஆரடா இளையவனே! ஏழு எருமைப்பால் குடித்த அருமகனே! நீ கன்னிவாடி போக வேண் டாம்! காளை பிடிததுக் கட்ட வேண்டாம்!'' என்று தாய் மன்றாடுகிறாள். ''காளை பாய்ந்து உன் குண்டாமணிக்குடல் எல்லாம் பொத பொத என்று வெளியே வரக் கனவு கண்டேன் ; போக வேண் டாம்!''

ஆனல் கறுப்பத்தேவன் முன்பே தீர்மானம் செய்துவிட்டான். "செத்தால் கன்னிவாடி, பிழைத்தால் எட்டையாபுரம்!" என்பது இப்போது அவனுடைய கோஷம் ஆகிவிட்டது.

"அகோ வாரும் அண்ணன்மாரே!" என்று அழைக்கிறன். "ஆரடி நங்கைமாரே!" என்று கூப்பிடுகிறன். அவர்களிடம் விடைகேட்கிறன். "கன்னிவாடி போகவேண்டாம், காளை பிடித்துக் கட்ட வேண்டாம்!" என்று பன்னிரண்டு பேரும் சொல்லுகிறார்கள்.

"செத்தால் கன்னிவாடி, பிழைத்தால் எட்டையாபுரம்!" என்கிறன் கறுப்பத் தேவன்.

"ஆரடி பெண்டாட்டிமார் இரண்டு பேரே! என் முன்னல் வந்து நிற்க வேணும்!" நிற்கிறார்கள்.

"நீங்கள் தாலியை அறுக்க வேணும்! தவிட்டுப் பானையில் போடவேணும்! நான் திரும்பி வந்தமேல் மறுபடியும் கட்ட வேணும்!"

பயங்கரமான ஆணை!

"ஆருமையா உள்ளூர் ஆசாரிமார்களா! வெண்கலத்தில் அரை நிறை, தங்கத்தில் அரை நிறை இந்தாருங்கள். நான் சாப்பிட்டு வருவதற்குள் பொன் ஊசி, பொன் சரடு பண்ணிக் கொடுக்க வேணும்!"

"ஆரடி பெற்றவளே! என் தாயே! பேர் வைத்த ரத்தினமே! நான் சாப்பிட்டு வருவதற்குள் ஏழு மூக்கணங்கயிறு திரிக்க வேணும். திரித்துக் கொடுக்க வேணும்!"

நங்கைமார் ஆறுபேரும் ஈனுதை வாழை இலையில் பதினெட்டு வகைக் காய் கறிசகிதம் நல்ல சாப்பாடாகப் போடுகிறார்கள். கறுப்பத் தேவன் தளிர் வெற்றிலையை ரசித்துப் போட்டுக் கொள்ளுகிறன்.

## 11. பத்து அபசகுனங்கள்

பொன் ஊசி, பொன் சரடு, மூக்கணம் எல்லாவற்றையும் கறுப்பத்தேவன் வாங்கிக் கொள்ளு

கிறான். அறுபது மார்க்கச்சையை எடுத்துக் கட்டிக் கொள்ளுகிறான். 70 மார் ஜண்டாவைப் பிடிக்கிறான்.

"ஆருமையா அண்ணன்மாரே! கோட்டை எல்லாம் பதனம்! நீங்கள் வீடுவாசல் பதனம்! ஜாக்கிரதை!"

'ஆரடி நங்கைமாரே! தாயாரை யாரும் கை நீட்டிப் பேசப்படாது!"

"ஆரடி பெற்றவளே! இன்றைக்கு வெள்ளிக் கிழமை கடும் பயணம் போகிறேன்."

எட்டையாபுரத் தேவன் முதல் படி இறங்குகிறான். விட்டத்தில் மேய்கிற வெள்ளை நாகம் குறுக்கே விழுந்து காலைக் காலைச் சுற்றுகிறது. பெற்றவள் பார்த்து விட்டாள்.

"வேண்டாமடா, மகனே! நீ கன்னிவாடி போக வேண்டாம், காளை பிடித்துக் கட்ட வேண்டாம்; இது சகுனமடா!"

"எனக்கு இது சகுனம் இல்லை, அம்மா!"

இரண்டாம் படிக்கு அபசகுனமாக வீட்டில் மேய்ந்த சட்டைப் பூனை; மூன்றாவது படிக்குக் குப்பையில் மேய்ந்த தாராக் கோழி; அப்புறம் எண்ணெய்க்குடம்; ஐந்தாம் படிக்கு விறகுச் சுமை. பிறகு 'வாழாத வான்குமரி மூளாத நெருப்பு எடுத்து வருகிறாள்.' ஏழாம் படிக்கு ஒரு நாவிதன். அப்புறம் ஒரு முண்டைப் பாப்பாத்தி. ஒன்பதாம் படியில் கால் வைக்கும்போது புதுச்சட்டி பொட்டுக் கலயம் கொண்டு ஒரு மண்ணுடையான் வருகிறான். கடைசியில் பாடையில் ஒரு பிணம் வருகிறது.

"இது எல்லாம் சகுனமடா, மகனே! போகாதே!" என்கிறது பெற்ற வயிறு.

"இதெல்லாம் சகுனம் இல்லை, அம்மா! நான் பெண்பிள்ளை பேச்சுக் கேட்டு அம்பலம் ஆக மாட்

டேன்" என்று கறுப்பத்தேவன் திட்டமாகச் சொல்லிவிடுகிறான்.

அண்ணன்மார்களுக்கும் நங்கைமார்களுக்கும் வேண்டிய புத்திமதிகள் சொல்லிவிட்டுக் கறுப்பத் தேவன் கரும்புப் பந்தலுக்குள் காலை வைக்கிறான். அவன் நீல விழிகள் நெருப்பாகக் காண்கின்றன. கண் துடிக்கிறது. கடுங் கோபம் ஆகிறது. எட்டிக் குதித்து வேகமாக ஓடுகிறான். அந்த அதிர்ச்சியில் செங்கரும்பு கணுவு கணுவாகக் கத்திரித்துப் பறக் கிறது. கருங்கரும்பு, வெள்ளைக் கரும்பு எல்லாம் தெறித்து விழுகின்றன. வழியில் உள்ள சிறுகல் தூள் பறக்கிறது. பெருங்கல் நாலு துண்டாகப் பிளக்கிறது. கன்னிவாடிக்கு ஏழுகல் பக்கத்தில் நெருங்கும்போதே ஏழு சுற்று வெள்ளிக் கோட்டை யும் ஏழு சுற்றுத் தங்கக் கோட்டையும் கலகல வென்று பேசுகின்றன. 'கருத்தாளி வருகிறான், காளை பிடித்துக் கட்டுவான்!' என்று சொல்வது போல இருக்கின்றன. மறு நிமிஷமே கறுப்பத் தேவன் கன்னிவாடிக்குள் வந்துவிடுகிறான்.

## 12. பெரிய இடத்துச் சூளுரை

கை கூப்பி நிற்கும் கறுப்பத்தேவன், "கன்னி வாடி அப்பன் துரைசாமி நீங்கள்தானா? அழைத்த விவரம் சொல்லவேணும். ஆள்விட்டசேதி என்ன?" என்று கேட்கிறான்.

கறுப்பத்தேவன் வரப்போகிறான் என்ற செய்தி கேட்டு ஒரு பெரிய கூட்டம் கூடி இருக்கிறது. சுற் றுப் புறத்து 'ராஜாக்கள்', ஜமீன்தார்கள், மிட்டா தார்கள், பொதுஜனங்கள் எல்லாருமே காளை பிடித்துக் கட்டுவதைக் காண வந்திருக்கிறார்கள்.

கன்னிவாடி துரைசாமி சொல்லுகிறார்: "நீங் கள் தானா எட்டையாபுரம் கறுப்பத்தேவர்?

சொல்ல வேணும். வனவாசம் போன காளைகள் ஏழையும் முளை அடித்துக் கட்டவேணும். கட்டினல்

சேலம் ஜில்லாவில் சரிபாதி பட்டயம்!
ஏழுசுற்று வெள்ளிக் கோட்டை சரிபாதி பட்டயம்!
ஏழுசுற்றுத் தங்கக் கோட்டை சரிபாதி பட்டயம்!
மூன்று லக்ஷம் சொத்தில் சரிபாதி பட்டயம்!
கன்னிவாடி கிராமம் சரிபாதி பட்டயம்!
மாடு கன்றுகள், ஆடு குட்டிகள்,
காளை எருதுகள் எருமை, கடாககள்
ஆயிரம் ஆயிரத்தில் சரிபாதி பட்டயம்!"

என்று துரைசாமி பாடம் படிக்கிருர்.

"அதேமாதிரி சர்க்கார் மன்றத்தில் கை எழுத்துப் போடவேணும். சொத்து, சுகத்தில் சரிபாதி என்று காணவேணும்!" என்று கறுப்பத்தேவன் கேட்கிருன்.

துரைசாமி கை எழுத்துப் போடுகிருர். ஆனல் சர்க்கார் சொல்லிக் கை எழுத்துப் போடுகிறது வேறு விஷயம். ஒரு கறுப்பத்தேவன் கேட்டுக் கை எழுத்துப் போடுகிறது வேறு விஷயம். துரைசாமிக்குக் கோபங் கோபமாய் வருகிறது.

"ஆரடா ஏழெருமைப் பால் குடிக்கும் கறுப்பத் தேவா! நீ சொன்னபடி கை எழுத்துப் போட்டு விட்டேன். அதேபடி காளைகளைப் பிடித்துக்கட்டா விட்டால் உன்னைச் செருப்பால் அடிப்பேன்!" என்கிருர்.

கறுப்பத்தேவன் மட்டும் இதற்குச் சளைத்தவனு, என்ன? "செருப்பால் அடிக்கிருயா, அடி! ஆனல் அப்படிப் பிடித்துக் கட்டி விட்டேன் என்ருல், உன் இளையகுடி வெள்ளையம்மாவைக் கொண்டுவந்து எனக்குப் பாரியாக நிறுத்த வேணும்!" என்று கேட்கிருன்.

கூட இந்த இரண்டு ஒப்பந்தங்களும் கையெழுத்து ஆகின்றன.

# 13. காளை வீர்யம்

"கறுப்பத்தேவன் ஆள்போலிருந்த மேனி எடுத்த ரூபம் என்ன ரூபம்?" என்று சபையோர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக்கொள்கிறார்கள்.

தெனசு ரூபம் எடுத்தவன் ஏழு மலைகளையும் தாண்டிப் பறக்கிறான். மண்டை பிதுங்கி மயிலைக் காளையின்மேல் போய் உட்காருகிறான். காளை 'கண்டு கண்டு' வருகிறது. துள்ளிக் குதிக்கிறது; வாலினாலே வீசுகிறது; குதித்துக் குதித்து ஓடுகிறது. தெனசு மண்டையிலே உட்காருகிறது. கறுப்பத்தேவன் கிருபையால் முள்வளையம் பூணுகிறான். மூக்கணங்கயிறு வாங்குகிறான். தெனசு ரூபத்தைவிட்டு ஆள் ரூபத்தைக் கொள்கிறான். காளைமேல் ஏறுகிறான். ஏழு திருப்புத் திருப்புகிறான். ஏழு மலை தாண்டுகிறான்.

கன்னிவாடியில் கூடியுள்ள ஜனங்கள் ஏறிட்டுப் பார்க்கிறார்கள். காளையின்மேல் ஆள் பறந்து வருகிறான். மண்டை பிதுங்கி மயிலைக்காளைக்கு வாயில் இரண்டு பக்கமும் நுரை தள்ளுகிறது. சபையை ஏழு சுற்றுச் சுற்றுகிறான். முளை அடித்துக் கட்டியும் விடுகிறான். சபையில் ஒரே கோலாகலம்!

இதற்குப் பிறகு கறுப்பத்தேவன், ஊர்க்குருவி, சிட்டுக்குருவி, சோளக்காற்று, செங்குளவி, செம்பூத்து என்கிற உருவங்களை எடுக்கிறான். செம்பூத்தான் காரிக்காளை, ஜாதியிலே வெள்ளைக்காளை சுத்தமான மயிலைக்காளை, ஜாதியிலே செவலைக் காளை, ஜாதியிலே பில்லைக்காளை என்ற ஐந்து காளைகளையும் தனித்தனியாக முளையடித்துக் கட்டி விடுகிறான்.

"தேவலையடா, இவன்! பலே கெட்டிக்காரன்! சின்னப் பையனாய் இருந்தும் ஆறு காளைகளைப் பிடித்துக் கட்டிவிட்டான். இன்னும் ஒரு காளை தான் பாக்கி இருக்கிறது!" என்று ராஜாக்களும் உத்தியோகஸ்தர்களும் ஜனங்களும் பேசிக்கொள்

கிறார்கள். "அதையும் கட்டிவிடுவான். இந்த ஒரே நாளில் ஏராளமான சொத்துச் சம்பாதித்து விடுவான்!" என்கிறார்கள்.

கூட்டத்தில் ஒரு தொட்டிய நாயக்கன் மந்திரத்தில் கெட்டிக்காரன். கடவுளை மனத்துக்குள் வேண்டிக்கொள்ளுகிறான். 'கொள்ளளவு மந்திரத்தை எள்ளளவாக ஊதுகிறான்' "சாமி, நிஜமான என் மந்திரத்தால் இவன் ஆள் ரூபத்திலேயே போகவேணும்!" என்று முணுமுணுக்கிறான்.

எட்டையாபுரத் தேவனுக்குப் புத்தி மாறிப் போகிறது. "இன்னும் ஒரு காளைதானே? பிடித்துக் கட்டிவிடலாம்!" என்று ஆள் ரூபமாகவே போகிறான் தத்தமலை, தவளைமலை, வெள்ளிமலை, விராலிமலை முதலிய ஏழு மலைகளையும் தாண்டிவிடுகிறான். சிங்கேரி மலையில் புலிக்குத்திப் பில்லைக்காளை மேய்ந்து கொண்டிருக்கும் இடத்துக்கு வந்து விடுகிறான்.

சக்கிலி முருகன் பில்லைக்காளை மிரண்டு நிற்கிறது. மறுகணம் பாய்ந்து ஓடிவருகிறது. கறுப்பத்தேவன் பயந்து ஓடுகிறான். என்ன ஆனாலும் பிடிக்கத்தானே வேணும் என்று முனைந்து வந்து காளையை முடுக்குகிறான். குதித்து வால் எட்டிப் பிடிக்கிறான். மேலே ஏறுகிறான். காளை மண்டிபோடுகிறது. தலையைச் சாய்த்துக் கறுப்பத்தேவனைக் கொம்பினால் கோதி எடுக்கிறது.

கறுப்பத்தேவனுடைய குண்டாமணிக்குடல் எல்லாம் பொதபொத வென்று வெளியே வந்து விடுகின்றன. யாரும் இல்லாத மலங்காட்டில், "அம்மா சொன்னது சரியாய்ப் போச்சு!" என்று நினைத்துக் கொள்ளுகிறான். தான் இப்போதே சாகக் கூடாது என்று கடவுளை வேண்டிகொள்ளுகிறான். குண்டாமணிக் குடலைப் பிடித்து உள்ளே தள்ளுகிறான். பொன் ஊசி, சரடு கொண்டு 'புரைகிறான்'.

அறுபது மார்க்கச்சையைப் 'பிகியுறான்' எழுபது மார் ஹண்டாவையும் எடுத்துப் 'பிகியுறான்.'

பிறகு எடுத்துக்கொள்வது கருங்குருவி உருவம். அது காளைமேல் உட்காருகிறது. முள் வளையம் பூணுகிறது. மூக்கணாங்கயிறு வாங்குகிறது. மறுபடியும் மனித ரூபங்கொண்டு காளைமேல் ஏறுகிறான் கறுப்பத்தேவன். ஏழு திருப்புத் திருப்புகிறான். ஏழு மலை தாண்டுகிறான். புலிக்குத்திப் பில்லைக் காளைக்கு 'வாய்காஞ்சாம் புலி' போல இரண்டுபக்கமும் நுரை தள்ளுகிறது. கன்னிவாடிக் கிராமத்தில் ஏழு திருப்புத் திருப்புகிறான். காளையை முளையடித்துக் கட்டிவிடுகிறான்!

"பாருமையா சபையோர்களே! காளை ஏழையும் பிடித்துக கட்டிவிட்டேன்!" என்று தான் கடமை செலுத்திவிட்டதைத் தெரிவித்துக் கொள்ளுகிறான்.

## 14. புது மணம்

"ஆருமையா, கன்னிவாடி அப்பன் துரைசாமி! நான் ஏழு காளையைக் கட்டிப் போட்டேன். இனிச் சொத்தில் சரிபாதி பட்டயம் பண்ண வேணும். அதற்கு முந்தி எட்டையாபுரத்துக்கு ஒரு தந்தி கொடுக்கவேணும். என் இனம், ஜனம், தாயார், அண்ணன்மார், நங்கைமார், பெண்டாட்டிகள் எல்லாரையும் ஜல்தியாக வரும்படி ஒரு தந்தி கொடுக்க வேணும்!" என்று கறுப்பத்தேவன் கேட்டுக் கொள்ளுகிறான்.

தந்தி பறக்கிறது. எட்டையாபுரத்தில் பெட்டி வண்டி கட்டிவிட்டார்கள். எல்லாரும் ஜல்தியாகக் கன்னிவாடி வந்து சேருகிறார்கள்.

சர்க்கார் மன்றத்திலே கறுப்பத்தேவன் இஷ்டப்படி ஆறு அண்ணன்மார் பேரிலும் பட்டயம் ஆகிறது. ஏழு சுற்று வெள்ளிக்கோட்டை, ஏழு சுற்றுத் தங்கக்கோட்டை முதலிய சொத்து விவரங்

களை எல்லாம் பட்டயம் பண்ண மூன்று நாட்கள் பிடிக்கின்றன. கன்னிவாடி அப்பன் துரைசாமி பாகக் கஞரில் கை எழுத்துப் போடுகிறார்.

"ஆருமையா கன்னிவாடி அப்பன் துரைசாமி! அன்றைக்கு மன்றத்தில் கை எழுத்துப் போட்டபோது என்ன கேள்வி கேட்டீர்? யார் ஜெலித்தது? இப்போது இளையகுடி வெள்ளையம்மாவை என் முன்னே பாரியாக நிறுத்த வேணும்!" என்கிறான் கறுப்பத்தேவன்.

துரைசாமி கூப்பிடுகிறார்: "ஆரடி இளையகுடி வெள்ளையம்மா! இனி நான் உன் புருஷன் இல்லை. இனி எட்டையாபுரம் கறுப்பத்தேவன் உன் புருஷன்! நீ அங்கே நிற்கவேணும்! அவன் சொன்னபடி கேட்கவேணும். இனி நான் உன் புருஷன் இல்லை!" என்கிறார் துரைசாமி.

வெள்ளையம்மா குளித்து முழுகுகிறாள். குருநாதப் பொட்டு வைத்துக்கொள்ளுகிறாள். சீவிச் சிக்கெடுத்துச் சிமிலி போலக் கொண்டையை வாரிக் கொள்ளுகிறாள். கன்னிவாடி துரைசாமி புத்தியாகப் பிழைத்துக் கொள்ளும்படி அவளுக்குப் போதனை செய்கிறார் வெள்ளையம்மா ஒய்யார நடை நடந்து உன்னதமான எட்டையாபுரக் கறுப்பத் தேவன் பக்கத்தில் ஜோடியாக நிற்கிறாள்.

"ஆரடி வெள்ளையம்மா! சக்கிலி முருகனிடம் என்ன எழுதி அனுப்பினாய்? 'உனக்கு முகத்திலே மீசை, எனக்கு முழங்காலிலே மீசை!' யாருக்கு முகத்திலே,—"

"சாமி, நான் சொன்ன வாய் கொன்னவாய்! என்னை மன்னிக்க வேணும்!" என்று வெள்ளையம்மா கெஞ்சுகிறாள்.

கன்னிவாடி அப்பன் துரைசாமி நேர்த்தியான பல்லக்கு ஒன்று ஜோடிக்கிறார். கறுப்பத்தேவனை

யும் வெள்ளையம்மாவையும் கன்னிவாடி கிராமத்து ஏழு வீதிகளிலும் 'மெரவணை' செய்து வைக்கிறார்.

எட்டையாபுரம் கோஷ்டி புறப்படுகிறது.

## 15. தெய்விக மறைவு

"ஆருமையா அண்ணன்மாரே! அன்புடனே கேளுங்கள். நம் எல்லையிலே ஒரு குகைக் குழி வெட்டவேணும். ஏழு படி வைத்து ஒரு வெள்ளை விநாயகர் கோயில் கட்டவேணும். ஏழு காளைகளைப் பார்த்தாற்போல் கிழக்கு முகமாகச் சிலை அடிக்க வேணும். வெள்ளையம்மாவையும் என்னையும்போல் கிழக்கு முகமாக ஒரு சிலை அடிக்கவேணும். கோயிலுக்கு முன்பு ஒரு பச்சைப் பந்தல் போட வேணும்!" என்று கேட்கிறான் கறுப்பத்தேவன்.

போயர்கள் வேலை செய்கிறார்கள். மூன்று நாளில் எல்லாம் முடிந்து விடுகிறது. பிறந்த தினமாகிய வெள்ளிக்கிழமை யன்று கறுப்பத்தேவன் முன்னாலும் வெள்ளையம்மா பின்னாலும் புலிக்குத்திப் பில்லைக் காளைமேல் ஏறிக்கொள்ளுகிறார்கள். குகைக்கு முன்பு கீழே இறங்குகிறார்கள்.

"ஆரடி பெற்றவளே! என் தாயே! பேர்வைத்த ரத்தினமே! என் பெண்டாட்டிமார்களைக் கூப்பிடு! தாலியை எடுத்துக் கட்டிக்கொள்ளச் சொல்! என் கால்மாட்டில் நிற்கச் சொல்!"

"ஆருமையா அண்ணன்மாரே! என் தலை மாட்டில் நில்லுங்கள்!"

"ஆரடி நங்கைமாரே! ஆறு பேரும் என் சுற்றிலும் வந்து நில்லுங்கள்!"

எல்லோரும் நிற்கிறார்கள். கறுப்பத்தேவன் கேட்டுக்கொண்டபடி பெற்றவள் எழுபதுமார் ஜண்டாவைப் பிரித்து எடுக்கிறாள். அறுபது மார்க் கச்சையை அவிழ்த்து வைக்கிறாள். கறுப்பத்தேவனுடைய குண்டாமணிக்குடல் எல்லாம் இற்று இற்று விழுகின்றன.

"அப்பா, மகனே! நான் சொன்ன வார்த்தை முடிந்ததே! அட, இத்தனை சொத்துச் சம்பாதித்து என்ன பிரயோஜனம்? இனி உன் தங்கமான முகத்தைத் தனிவழியே எப்போது பார்ப்பேனடா? தேகம் பதறுதடா! பெற்ற வயிறு எரியுதடா!" என்றெல்லாம் தாய் புலம்புகிறாள்.

கறுப்பத்தேவன் எல்லாருக்கும் புத்திமதி சொல்லுகிறான். "ஆரடி வெள்ளையம்மா! நீ இங்கே பாரியாய் நிற்கவேணும். வெள்ளை விநாயகரை ஸ்தோத்திரம் பண்ணவேணும். சாணி போட்டு மெழுகி, விளக்கு எரிக்கவேணும். பாரியாய்க் கோயிலில் தவம் செய்யவேணும்!" என்கிறான்.

"நான் பிறந்தது வெள்ளிக்கிழமை. காளை பிறந்தது வெள்ளிக்கிழமை! இன்று வெள்ளிக் கிழமை! அண்ணன்மார்களே, இன்று நான் குகையிலே இறங்கப் போகிறேன்."

"ஆரடி நங்கைமார்களே! நான் கைலாசம் போகப் போகிறேன். நீங்கள் பெற்றவளைக் கை நீட்டிப் பேசப்படாது! பொக்குப் பொடுகென்று பேசப்படாது!"

"ஆருமையா அண்ணன்மாரே! அம்மாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்!"

"ஆரடி பெண்டாட்டிமார் ரெண்டு பேரே! தாலியை எடுத்துத் தவிட்டுப் பானையில் போட்டு விடுங்கள். சொத்துச் சம்பாதித்துவிட்டேன். சோற்றுக்குச் சாற்றுக்கு விசனம் இல்லை!"

எல்லாருக்கும் புத்திமதி சொல்லிவிட்டு எட்டையாபுரம் கறுப்பத்தேவன் பூமியில் இறங்கிவிட்டான்.

புலிக்குத்திப் பில்லைக்காளை மடிந்து விழுகிறது. அதற்குக் குழிவெட்டிச் சமாதி கட்டுகிறார்கள்.

வெள்ளையம்மா மட்டும் பாரியாக நிற்கிறாள்.

செத்து மடிந்தாரே செல்லேறி மேய்ந்திடவே!
மேல்லோகம் போனரே! மீளாரையே!

முற்றிற்று